# சூழமைவு பகுப்பாய்வு

## *பிண்னணி :*

ஏனைய காலனித்துவ நாடுகள் போலவே இலங்கையும் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் பின்பற்றப்பட்ட காலனித்துவ சட்டங்களேயே பின்பற்றுகின்றன. இது விக்டோரியன் அறநெறியை பிரதிபலிப்பதால் பல்விதமான விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. அவ்வாறான ஒரு சட்டமாக காணப்படுவது சமபாலின சேர்க்கைக்கு எதிராக உள்ள சட்டமாகும். இருந்தப் போதிலும் இலங்கை பெண்கள் உரிமைக்கு சார்ப்பாக பல சட்டங்களை உருவாக்கியிருந்தாலும் பாலியியல் சம்பந்தமான சட்டம் இன்னும் கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. தனிநபர்களால் LGBT[1] மக்கள் மீது உட்படுத்தப்பட்ட வன்முறை, LGBT இயக்கம் மீது ஊடகங்கள் மற்றும் சமய சார் நிறுவனங்கள் விதித்துள்ள தடை மற்றும் பாலியியல் பிரச்சனைகள் தொடர்பாக பொதுவான இடங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்த பாரிய தடைகளே உள்ளன. இதனடிப்படையில் EQUAL GROUND ஒரு ஆய்வை மேற்கொண்டு அதன் மூலம் சம உரிமை இல்லாததால் LGBT மக்கள் முகம் கொடுக்கும் வன்முறைகள் மற்றும் LGBT மக்கள் வாழ்க்கையில் ஏற்படும் குற்ற நடவடிக்கைகள் என்பவற்றை ஆவணப்படுத்த முற்பட்டது. இந்த ஆய்வின் நோக்கமாக அமைவது LGBT மக்கள் பற்றி இலங்கை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் பகுதி 365 மற்றும் 365A யில் காணப்படும் விளைவுகள் பற்றி புரிந்துக் கொள்வதே ஆகும். இக் கற்க்கையின் நோக்கமாக அமைவது திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டு சட்டத்தரணிகளுக்கான ஒரு பயிற்சி கைந்நாலை தயாரிப்பதேயாகும்.அதன் பின் இலங்கை முழுவதிலும் உள்ள சட்டத்தரணிகளுக்கு பயிற்யளிப்பதன் மூலம் LGBT சம்பந்தமான பிரச்சனைகளுக்கு கூருணர்வு உள்ள ஒரு சட்டத்தரணிகள் வலையமைப்பை அமைப்பதன் மூலம் LGBT மக்களின் உரிமைகளை பாதுகாக்க முயலல்.

## *முறைமைகள்:*

இக் கற்க்கை கணியம் சார் மற்றும் பண்பு சார் முறைகளை பாவித்து சட்டம் சம்பந்தாமான தற்போதைய நிலையை மற்றும் LGBT நபர்களுக்கு இச்சட்டத்தினால் ஏற்பட்டுள்ள தாக்கம் பற்றி ஆராய்ந்தது. பண்பு சார் ஆய்வு பாலியியல் பற்றிய பிரச்சனைகள் மற்றும் சட்டம்,பாகுப்பாடு மற்றும் அதனால் ஏற்பட்ட தாக்கம்,பல்வேறு தலையங்களில் நிபுணர்களின் உள்ளீடுகள் மற்றும்

---

[1] இந்த அறிக்கையில் LGBT எனக் குறிப்பிடப்படுவது பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரட்டைப் பாலுறவு நபர்கள், பால் மாற்றம் செய்தவர் (ஆணிலிருந்து பெண், பெண்ணிலிருந்து ஆண் மற்றும் ஆண் அல்லது பெண் என தம்மை பால்நிலை செயற்பாடுகளை முழுமைய செய்ய முடியாதவர்கள்) என்பவரை உள்ளடக்குகின்றது.

வேறுப்பட்ட பங்குதாரர்களுடனான நேர்முகம் போன்றவற்றை அடிப்படையாக கொண்டது.கணியக் கற்க்கையானது பத்து நகரங்கள் மற்றும் ஒன்பது மாவட்டங்களில் நடாத்திய நேர்முக காணலை அடிப்படையாக கொண்டது. கீழ் காணும் பங்குதாரர்களுடன் நேர்முக காணல் இடம் பெற்றது.பொலிஸ்,சட்டத்தரணிகள்,மருத்துவ செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமை நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள், LGBT சமூக அங்கத்தினர்கள் போன்றோராவர்.பண்பு சார் கற்கையில் மூன்று இனத்தையும் சேர்ந்தவர்களின் கருத்துக்களும் பெறப்பட்டுள்ளன.மொத்தமாக 109 நேர்முக காணல் இடம் பெற்றுள்ளது.

***வரையறைகள்:***

1. கணிய சார் ஆய்வு மிகவும் தீர்க்கமாக செய்ய முடியவில்லை மற்றும் கற்க்கை முக்கியமாக நகர பகுதிகளை மையமாக கொண்டே நடாத்தப்பட்டது.
2. பிரிவு 365 மற்றும் 365A போன்றவற்றின் ஊடாக செயற்படுத்தப்படும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் சம்பந்தமான சட்டங்களை அணுகுவதில் இருந்த சிக்கல்கள் மற்றும் வயது வந்தோரின் ஒப்புதலுடான பாலியியல் சம்பந்தம் பற்றி இலகுவில் தகவல்களை திரட்ட முடியவில்லை.இவ்வறிக்கை வேறு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமை சம்பந்தமான அறிக்கைகளில் சம்பந்தமான கட்டுரைகளில் அதிகமாக தங்க நேரிட்டது.

## *365 மற்றும் 365A உடைய வரலாறு*

குற்ற குறியீட்டில் காணப்பட்ட பிரிவு 365 மற்றும் 365A யில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால் : 'யாரோருவர் இயற்க்கைக்கு எதிராக எந்த ஒரு ஆண், பெண் அல்லது மிருகத்துடன் சரீர உடலுறவு கொள்கிரார்களோ அவர்களுக்கு விளக்கத்துடன் சிறையில் அடைக்கப்பட்ட நிலை (அதாவது எளிய அல்லது சிக்கலான) உருவாகும். இது பத்து வருடங்களுக்கு உட்பட்டதாக இருக்க கூடிய அதே சந்தர்ப்பத்தில் இத்தண்டனை நிதி சார்ந்ததாகவும் அமையலாம்.[2]

1995ம் ஆண்டு வரை 365A யில் உள்ள உப தலையங்கங்களில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"பொதுவாக அல்லது தனியாக எந்தவொரு ஆண் மகனும், குற்றச் செயல் செய்தாலோ அல்லது ஒரு பிரதிநிதியாக பொறுப்பேற்றாலோ அல்லது இன்னுமொரு ஆண்மகனுக்கு விபச்சாரியை தேடிக் கொடுத்தாலோ அல்லது அதற்க்கு முயற்சி செய்தாலோ, மற்றைய ஆணுடன் முரடாக அநாகரிகமாக நடந்துக் கொண்டாலோ அதனை தண்டனைக்குரிய குற்றமாக கருதி விளக்கமான சிறைத் தண்டனை குற்றமாக கருதப்பட்டு அது இரண்டு வருடத்துக்கு நீடிக்கப்படலாம் அல்லது

[2] இலங்கை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 365

நிதி சார் தண்டனையாக மாற்றப்படலாம் அல்லது இரண்டுமாகவே செயற்படுத்தப்படலாம் மற்றும் சாட்டையடி மூலமும் தண்டனை நிறைவேற்றப்படலாம்.[3]

இச் சட்டங்கள் 1883ல் பிரித்தானியா அதன் காலனிகளில் விக்டோரியா மதிப்புகளை உட்படுத்துவதற்காக முயன்ற போது இலங்கையிலும் உட்படுத்தப்பட்டது.1860ல் இந்திய சட்டங்களின் ஆணைக்குழுவின் தலைவராக பிரபு மெக்குலே கடமையாற்றினார்.அவரே இந்திய குற்ற சட்டத் தொகுப்பில் பகுதி 377ஐ உட்பகுத்தும் படி வலியுறுத்தினார்.அதே மாதிரியான சட்டங்கள் தொடராக இலங்கைப் போன்ற காலனிகளிலும் அமுல்படுத்தப்பட்டன.[4] மெக்குலேயின் முதல் நகல் "இயற்க்கையல்லாத காமவேட்கைக்கு ஒரு நபரை தொட்டதிற்காக தண்டனை வழங்கப்பட்டது"[5] மெக்குலே இவ்வாறான ஒழுங்கேடான செயற்பாடுகள் பற்றி அதிக விவாதம் செய்யாததால் இச் சட்டம் எந்தவித பிரச்சனையை இல்லாமல் நிறைவேற்றப்பட்டது.ஆகவே சட்டங்களின் பாஷையே தெளிவற்றதாக காணப்பட்டது.தன்னிச்சை உடலுறவு அல்லது இயற்கைக்கு எதிரான செயல் போன்றவை பற்றி தெளிவான வரைவிலக்கணம் கிடையாது.இந்திய நீதிமன்றம் தொடராக இது சம்பந்தமாக வரைவிலக்கணங்களை விரிவுப்படுத்தியுதடன் அமுல்படுத்தவும் தொடங்கியது.இதனால் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்றால் "இயற்க்கைக்கு எதிரானது" என்பது சந்ததிவிருத்திக்கு எதிரான பாலியியல் தொடர்பு என வரைவிலக்கணப் படுத்தப்பட்டது. பல் தரப்பட்ட தீர்ப்புகளின் மூலம் தனியார் பிரதேசத்திற்க்குள் தலையீட்டு திருமணம் தாபனம் ஒன்றை உருவாக்கியதும் மறு ஒழுங்குமுறை மதிப்புகளை உட்புகுத்தியதும் ஊடாக அரசின் திறன் வெளிப்படுகின்றது.இலங்கையும் இது மாதிரியாக சட்ட வரலாரை கொண்டிருந்தாலும் இலங்கை நீதிமன்றம் எந்தவிதமான மாற்றங்களையும் வரைவிலக்கணங்களையும் கொண்டு வரவில்லை.

1995ம் ஆண்டில் பாரளுமன்றம் குற்ற சட்டத்தொகுப்பில் பலவித மாற்றங்களை கொண்டு வருவதற்க்கு ஒப்புதல் அளித்தது.இந்த குற்ற சட்டத் தொகுப்பின் மாற்றத்தின் பிண்னணியாக ஒப்புதல் வழங்கப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட பாலியியல் செயற்பாடுகள் காரணமாய் அமைந்தன. சிறுவர் துஷ்பிரயோகம் அதிகமாக இலுந்த கட்டத்திலேயே இச் சட்ட மாற்றங்கள்

---

[3] 1995ஆம் ஆண்டு திருத்தத்திற்கு முன்னர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 365 அ

[4] மிஸ்ரா. ஜி. இந்தியாவில் ஓரினச்சேர்க்கையை குற்றமற்றதாக்கல்: *இனப்பெருக்கச் சுகாதார விடயங்கள்:* 2009 http://vidyarogya.com/images/pdf/16-03-2011/decriminalising_homosexuality_india.PDF 10/01/2013 அன்று பார்க்கப்பட்டது.

[5] Cl 361: "இயற்கைக்கு மாறான காமவேட்கை, தொடுதல் என்பவற்றில் வேண்டுமென்றே யாரேனும் ஒருவர் ஈடுபடுவதால், எந்தவொரு நபர் அல்லது எந்தவொரு மிருகம் அல்லது அவரது சுய விருப்பின் அடிப்படையில் தொடும் எந்தவொரு நபரும் இயற்கைக்கு மாறான காமவேட்கையை வெளிப்படுத்தினால், 14 வருடங்கள் வரை நீடிக்கக் கூடிய மற்றும் 2 வருடங்களுக்கு குறையாத சிறைத்தண்டனை வழங்கி தண்டிக்கப்படலாம்". என குப்தா குறிப்பிடுகின்றார். பிரிவு 377 மற்றும் இந்திய ஓரினச் சேர்க்கையாளர்களின் கண்ணியம், *பொருளாதார மற்றும் அரசியல் நாளேடு,* நவம்பர் 18, 2006 http://www.iglhrc.org/binary-data/ATTACHMENT/file/000/000/15-1.pdf

உருவாக்கப்பட்டன.இதன் முக்கிய புள்ளியாக காணப்பட்டது வெளிநாட்டவர்களால் இளைஞர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதே ஆகும். ஆனால் குடும்ப கட்டமைப்புக்குள் காணப்பட்ட பிள்ளைகள் பற்றி கவனிக்கப்படவில்லை என்பது கவனிக்கப் பட வேண்டிய விடயமாகும்.1990களில் தொடராக இடம் பெற்ற சிறுவர் துஷ் பிரயோகத்தால் இது சார்பாக நிறைய கவனம் உண்டாகியது.[6]

ஒரு தொழில் சார் ஆணைக்குழு ஒன்று அரசினால் நியமிக்கப்பட்டது.அதில் பல்வேறுப்பட்ட பங்காளர்கள் காணப்பட்டார்கள் அவர்களினால் பல்தரப்பட்ட சிபாரிசுகள் முன் வைக்கப்பட்டன அதில் முக்கியமாக ஒப்புதலுள்ள வயது வந்தோர் உடலுறவு சம்பந்தமான 365 மற்றும் 365A சட்டத்தை நீக்குவதற்கான ஆலோசனைகளும் வெளிக் கொணரப்பட்டன.ஆனாலும் இச் சிபாரிசுகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு மிகவும் பிற் போக்குதனமான மாற்றம் ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பகுதி 365 மாற்றப்பட்டு தண்டனை மிக அதிகமாக்கப்பட்டது.அதாவது சிறைத்தண்டனை மிகவும் கடுமையானதாக மாற்றப்பட்டது அதாவது யாராவது 18 வயதுக்கு மேலுள்ள ஒருவர் 16 வயதுக்கு கீழுள்ள ஒருவருடன் தேவையற்று நடந்தால் சிறைத் தண்டனைக் காலம் பத்து அல்லது இருபது ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டது. இரண்டாவது மாற்றமாக முரட்டுதனமான அநாகரிக நெலுக்கு உள்ள சட்டத் தொகுபபான் 365ல்[7] “ யாராவது ஆண்மகன்” என்ற சொல் “ யாரவாது நபர்” என மாற்றமடைந்து அது பால் சமத்துவமாக மாற்றமடைந்தது. அதாவது பெண்ணுக்கும் உரித்தானதாக்கப்பட்டு தண்டனை 365ல் உள்ளதுப் போலவே நிர்ணயம் செய்யப்பட்டது. அது முன்னேற்பாடாக நஷ்ட ஈடு வழங்குவது பற்றி கூறப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப 16 வயதுக்கு குறைந்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டது.

## *இந்த தொகுப்புகளுக்கு ஏனைய நாடுகள் எவ்வாறு விளக்கமளித்தது*

கீழ் காணப்படும் பகுதியில் ஏனைய தெற்காசிய நாடுகள் இந்த பகுதிகளை எவ்வாறு பாவித்தன என்பது விளக்கமாக கூறப்பட்டள்ளது.

---

[6] தம்பையா

[7] பொது இடத்தில் அல்லது தனியார் இடத்தில் எந்தவொரு நபரும் அல்லது தரப்பும், முன்னெடுத்தால் அல்லது எந்தவொரு நபராலும் மற்றுமொரு நபருக்கு முழுமையான ஒழுங்கீனத்தினை முன்னெடுக்க முயற்சித்தால் குற்றம் புரிந்தவராக கருதப்படலாம். இரண்டு வருடங்கள் வரை நீடிக்கக் கூடிய சிறைத்தண்டனை அல்லது அபராதம் மற்றும் சிறைத்தண்டனை என்பவற்றுக்கு ஆளாகலாம். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட நபர் ஒருவரினால் 16 வயதுக்கு குறைந்த நபர் ஒருவரின் மீது முன்னெடுக்கப்படும் செயலாயின், பத்து வருடங்களுக்கு குறையாத கடூழிய சிறைத்தண்டனை மற்றும் இருபது வருடங்கள் வரை நீடிக்கக் கூடிய, அபராதத்துடனான சிறைத்தண்டனையும், நீதிமன்றத்தினால் விதிக்கப்படக் கூடிய இழப்பீடுத் தொகையை வழங்குமாறும் பணிக்கப்படலாம்.

இந்திய 377வது குற்ற சட்டத் தொகுப்புக்கு மிகவும் நீண்ட வரலாரை கொண்டள்ளது.இந்த சட்டத்தொகுப்பு இலங்கையின் 365 வது சட்டத் தொகுப்பு அருகாமையானது.[8] 2009ல் டெல்லி நீதி மன்றம் 377ம் தொகுப்பினை நன்றாக வாகித்து வரவேற்க்க தக்க வகையில் தீர்ப்பினை வழங்கியது.அது தீர்ப்பில் அரசியல் அமைப்பு நெறியில் ஒரு திடம் பதித்தது.நாஸ் தீர்ப்புக்கு முன் 377ம் சட்டத்தொகுப்பின் மூலம் நீதிமன்றம் பல வழக்குகளுடன் செயல்பட்டது.இந்த அறிக்கை ஐம்பது அறிக்கையிடப்பட்ட வழக்குகளிலிருந்து சிலவற்றை தொகுத்து வழங்கியுள்ளது.

***காணு v. பேரரசன்***[9] என்பது 377 தொகுப்பை கவனிக்கும் போது முதலாவது பதியப்பட்ட வழக்காக காணப்படுகின்றது. கென்னடி A.J.C.யின் பகுதியை விபரிக்கும் போது "சரீர சம்பந்தமான உடலுறவை இயற்க்கைக்கு எதிராக செயற்படுத்தப்படும் போது தண்டனை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு விதிக்கின்றது"நீதிபதி இந்த செயற்பாட்டில் வாய் வழி உறவுக் கொண்டிருப்பதன் காரணமாக இது இயற்க்கைக்கு எதிராக காணப்பட்டதும் மற்றும் சரீர வகை உறவின் மூலம் மனித உயிர் புதிதாக பிறப்பிக்கப்பட வேண்டும் என்டிதேயாகும்"

***கெதர் நாத் vs. ராஜஸ்த்தான் மாநிலம்***[10] நீதிமன்றம் சிறுவர் துஷ்பிரயோக வழக்குடன் செயற்பட்டது. நீதிமன்றம் குற்றம் சுமத்தப்பட்ட பிரதிவாதியை பிடித்ததன் பின் 377ம் சட்டத் தொகுப்பை பரிசீலனைச் செய்தது.சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பல வழக்குகள் ஒன்று சேர்ந்து இந்திய நீதி மன்றத்தினுள் காணப்பட்டதன காரணம் 377ம் சட்டத் தொகுப்பை தவிர வேறு சட்டங்கள் அங்கு காணப்படாதேயாகும்.அத்துடன் நீதிமன்றத்திற்க்கு சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளுக்கும் வயது வந்தோரினது சம்மதத்துடன் நடைப்பெறுவததற்க்கும் இடையில் வேறுப்பாட்டை காண முடியாமல் போனதும் கவலைக்குரிய விடயமாகும்.

***நொசீர்வன்***[11] ***மற்றும் மின்வாளா***[12] ஆடவரிடையே ஒரு பாற்புணர்ச்சியை வழமையாக மேற்க் கொள்ளும் பிரதிவாதிகளின் தோற்றத்தை ஒரு தனிப்பட்ட நடவடிக்கை மூலம் கணிக்காமல் தொடர்ச்சியாக பல்வேறுப்பட்ட"மக்கள்" உடன் நிலையாக தொடாச்சியாக ஒரு பாற்புணர்ச்சியை கொள்ளும் நிலையையே கருத்திற் கொள்ள வேண்டும்.

---

[8] பிரிவு 377: இயற்கைக்கு மாறான குற்றங்கள் - எந்தவொரு ஆணுடனும், பெண்ணுடனும், அல்லது மிருகத்துடனும் இயற்கைக்கு மாறான சரீரம் சார்ந்த உடலுறவில் ஈடுபடுவது, ஆயுள் தண்டனை அல்லது பத்து வருடங்கள் வரை நீடிக்கக் கூடிய சிறைத்தண்டனைக்கு ஆளாகும் வகையில் தண்டிக்கப்படலாம். குறித்த குற்றத்தை புரிபவருக்கு அபராதமும் விதிக்கப்படும். விளக்கம் - இந்த பிரிவில் விளக்கப்பட்டுள்ள குற்றத்துடன் சம்பந்தப்பட்ட சரீரம் சம்பந்தமான உடலுறவில் ஈடுபட முயற்சித்தல்.

[9] AIR 1925 Sind

[10] 1985 (2) WLN 560

[11] நொசீர்வன் v ஆட்சியாளர் AIR 1934 Sind 206

[12] னு ீ மின்வல v ஆட்சியாளர் Emperor AIR 1935 Sind 78.

377 பகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளை பேரம் பேசும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் நெறிகளை வரையறை செய்யவும் மறு வரையறை செய்யவும் சட்டத்தில் பரந்த இடம் காணப்படுவதே ஆகும். 1980களில் இந்திய நீதி மன்றங்களில் ஓரினச் சேர்க்கை மற்றும் முறைக்கேடுகளுக்கு இடையே தொடர்புகள் உருவாக்கப்பட்டதை அவதானிக்க கூடியதாக இருந்தது.இது ***fபசால் ராப்***[13] மற்றும் ***பூரன் ராம்***[14] பாவிக்கப்பட்டதை அவதானிக்க கூடியதாய் இருந்தது.

சுட்டத்திற்க்கு முன் சம்மதம் என்பது தேவையற்றதாகி விடம் அதே நேரம் நீதிமன்றங்களில் பாலியியல் பாலாத்காரம் சம்பந்தமான விவாதங்கள் இடம் பெறும் போது சம்மதம் என்பது பெரும் பங்கு வகிக்கின்றது. ***மிகிர் மற்றும் ஒரிசா***[15] மாநிலம் வழக்கில் பாதிக்கப்பட்டவரின் சம்மதம் தேவையற்றது ஒன்று என்று நீதிபதி கூறியுள்ளார் அதன் காரணமாக அமைவது “ நாகரீக சமூகத்தால் இயற்க்கைக்கு புறம்பான சரீர சார் உடலுறவு வெறுக்க தக் வகையில் மேற்க் கொள்ளப்பட்டதாகும்.”ஒரு பாற்புணர்ச்சியை நாகரீகமற்று முரட்டுதனமாக மேற்க் கொள்ளும் போது அது கணக்கில் எடுக்கப்படுகின்றது. ***ஜோன் என்தனி சகோதரன் மற்றும் அரசுக்கும்***[16] இடையிலான வழக்கில் விடுதிகளில் இருந்த மாணவர்களினால் அவர்களை பாலாத்காரமாக வாய்வழி புணர்ச்சியை மேற்க் கொள்ளுமாறும் கையாடற் பழக்கத்தின் மூலம் செயற்க்கை சிற்றின்பம் காணுதல் செயற்பாட்டில் ஈடுப்பட வைத்ததிற்காக ஆசிரியருக்கு எதிராக தொடுக்கப்பட்டது.இந்த வழக்கில் மீண்டும் இயற்க்கைக்கு எதிராக என்ற கருத்து முன்னிலை வகித்தது.தாக்குதல் என்பது

(முக்கியமாக வன்முறையுடனான) நீதிமன்றத்தில் இரண்டாம் பட்சமாகவே கருதப்பட்டது.

***சாக்ஷி மற்றும் இந்தியன் யுனியன் (Uoi) மற்றும் Ors***[17]**.** பாலியியல் துஷ்பிரயோகம் மற்றும் குற்றச் சார்பான பாலியியல் நடவடிக்கை சம்பந்தமான தண்டனை சட்டத் தொகுப்பில் காணப்படும் பல்தரப்பட்ட பகுதிகளை நீதிமன்றம் தேடிப் பார்த்தது.அப்போது தெரிய வந்தது என்னவென்றால் மனுதாரருக்கான மிக பெரிய சவாலாக தென்பட்டது என்னவென்றால் 377 சட்டத்தொகுப்பு பெண் பாலியியல் பலாத்காரத்துக்கு நீதி வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் 377 உண்மையில் உருவாக்கப்பட்டதற்கான காரணம் பெண் பாலியியல் பலாத்காரத்துக்கு நீதி வழங்குவதற்காக அல்ல. பாலியியல் பலாத்காரத்தை நிருபிக்க வேண்டுமென்றால் மனுதாரர் உட்புகுத்தலின் ஆளத்தை குறிப்பிடப்பட வேண்டிய சவாலுக்கு

---

[13] ∴பசால் ரப் சௌத்ரி v பீகார் மாநிலம் AIR 1983 (SC) 323.
[14] பூரன் ராம் v ராஜஸ்தான் மாநிலம் 2001 CriLJ 91.
[15] மிஹிர் v ஒரிசா மாநிலம், 1992 CriLJ 488.
[16] 1992 CriLJ 1352
[17] AIR 2004 SC 3566

முகம் கொடுக்க வேண்டி நேரிடுகின்றது.நீதிமன்றம் 377 ன் தேவையை உறுதி செய்ததுடன் மட்டுமல்லாமல் ஒழுக்கமுறையான மற்றும் இயற்க்கைக்கு எதிரான பாலியியல் செயற்பாடுகளுக்கான சட்ட தொகுப்புகளையும் உறுதி செய்தது.

***NAZ நிதியம் v NCT டெல்லி***[18] நீதிமன்றம் அரசியற் சட்டங்களில் சமத்துவம் வழங்கல் பற்றிய தொடர் வாசிப்பை தொடங்கிய அதே வேளையில் சட்டம் சம்பந்தமான வரையறை பொதுவான வரையறையை விட மேலானது என்றும் அரசியல் சட்டம் மற்றும் சட்டம் பொதுவான சட்டம் காரணமாக எந்தவொரு குழுவுக்கும் பாகுபாடு ஏற்படமால் பாதுகாக்க வேண்டும் என்றும் உறுதி படுத்த தொடங்கியது.377 என்பது இந்தியாவின் சட்டத்திட்டங்களுக்கு எதிரானது என்றும் அது அனைத்து பிரஜைகளையும் பாதுகாக்க தவறிவிட்டது எனவும் நீதிமன்றம் முன் மொழிந்தது.பகுதி 377 LGBT சமூகத்துக்கு எதிராக வெளிப்படையான வன்முறைகளுக்கு தூண்டியது என்றும் STD's பரவுவதை தடுப்பதற்க்காக சுகாதார பராமரிப்புக்கு அவர்களை செல்ல விடாமல் தஜத்தது என்றும் புகார் கூறியது.

***அரசு vs. ஹம்சு*** [19]பிரதிவாதியால் சிறுமியை பாலுறவுக்கு உட்படுத்தியதன் பின் கொலை செய்த வழக்கு பேரம் பேசப்பட்டது.மிகவும் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் நீதிமன்றமேதான் நாஸ் தீர்ப்புக்கு வழிவகுத்தது. ஏனைய தீர்ப்புகளில் போல இயற்க்கைக்கு எதிரானதென்றோ சரீர உடலுறவுப் பற்றி வரையறை செய்யவோ இல்லை.இந்த வழக்கு ஆணித்தரமாக பாலியியல் வன்முறை மற்றும் சிறுமியின் இறப்பு பற்றியே அதிக கவனம் செலுத்தியது.

***தினேஷ்பாகாய் vs. தெரியாது***[20] 377ன் கீழ் கூறப்பட்ட " பல்வகையான முறைக்கேடுகள்" பற்றிய வழக்குகள் பற்றி தீர்க்கமாக பார்க்க தொடங்கியது.சட்டத்தினால் பார்க்கப்படும் வரை நாஸ் தீர்ப்பை நீதிமன்றம் தக்க வைத்தது. பூரண சம்மதம் இல்லாததன் காரணமாக 377ன் பகுதி இதற்க்கு சாதகமாக அமைந்தது.

**பாகிஸ்தான்-**

பாகிஸ்த்தானும் காலனித்துவ அமைப்பில் காணப்படும் குற்றம் சம்பந்தமான குற்ற சட்டத் தொகுப்புகளேயே கொண்டுள்ளது. பாகிஸ்தான் பொது சட்டம் மற்றும் இஸ்லாமிய சட்டம் மூலமே நிர்வகிக்கப்படுகின்றது. பாகிஸ்த்தான் குற்றச் சட்ட தொகுப்பு " இயற்க்கைக்கு எதிரான சரீர சம்பந்தமான உடலுறவு" என்ற பதத்திற்கே 377ல் முக்கியத்துவம் அளிக்கின்றது.அதாவது

---

[18] *Naz நிதியம்* v *புதுடில்லி ஜேஉவு அரசாங்கம்,* 160 டெல்லி லோ டைம்ஸ் 277 (டில்லி மேல் நீதிமன்றம் 2009)

[19] மரண தண்டனை குறிப்பு இல. 5, 2009

[20] மேன்முறையீடு இல. 1111, 2003

இந்தியாவை போன்றே வடிவமைக்கப்பட்டுள்ளது.இருந்தப் போதிலும் கடந்த வருடங்களில் பாகிஸ்தான் நீதிமன்றம் சில நேரங்களில் மிகவும் திட்ட வட்டமான முடிவுகளை எடுத்துள்ளது. மாற்றுபாலியியல் சமூகம் பற்றிய பல வழக்குகள் அவர்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையிலேயே நிறைவேற்றப்பட்டன.[21] காவல்துறையின் அலைக்கலித்தலின் காரணமாக மாற்றுபாலியியல் வழக்குகள் அனைத்தையும் நீதிமன்றத்துக்கு அனுப்புமாறு பணிக்கப்பட்டள்ளது.வாழ்வதற்கான சுய உரிமையையும் மற்றும் சுகாதார பராமரிப்புக்கான நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நீதிமன்றம் கூறியுள்ளது.சஹாசினா மற்றும் சும்வில்லினுடைய வழக்கில் பாகிஸ்தானின் பிரஜை என்ற உரிமையை பெற்றுக் கொடுப்பதில் தீவிரம் காட்டியது.மேன் முறையீட்டு நீதிமன்றம் சும்மேயிலை விடுதலை செய்யத போதிலும் அவருடைய பால் தொடர்பாக நீதிமன்றத்திற்க்கு பொய் கூறியதன் காரணமாக அவருக்கு நிதிசார் தண்டனை வழங்கப்பட்டது.[22]

### நேபாளம்

சுனில் பாபு பண்ட் வழக்கில்[23] நேபாள நீதிமன்றம் பாலியியல் நோக்குநிலை மற்றும் பாலினம் சம்பந்தமான பாகுபாட்டு நிலையை குறைக்குமாறு அரசுக்கு வலியுறுதியது.பாகுபாடு சம்பந்தமான சட்டம் சம்பந்தமான நிலையை மேலும் திடப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.இருந்தப்போதிலும் பாலியியல் நோக்குநிலை மற்றும் பாலினம் சம்பந்தமான பாகுப்பாட்டினை குறைப்பதற்க்காக புது சட்டமூலங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

---

[21] http://www.startribune.com/templates/Print_This_Story?sid=83740347

[22] தமது மார்பகங்கள் மற்றும் கருப்பையை சத்திர சிகிச்சை மூலம் அகற்றியதன் பின்னர், 16 வருடங்களாக பால்மாற்றம் செய்து கொண்ட ஆணாக சுமைல் ராஜ் இருக்கின்றார்.

[23] சுனில் பாபு மற்றும் ஏனையோர் எதிர் நேபாள அரசாங்கம் மற்றும் ஏனையோர் 2 NJA L.J.[2008] 261-286 http://www.njanepal.org.np/Anex_2.pdf

## *365 மற்றும் 365A மூலம் குற்றவாளி என நிறுபிக்கப்படும் தனிநபர்களுக்கு முறையாக வழங்கப்படும் சட்ட நடைமுறை என்ன?*

குற்ற நடைமுறையில் உள்ள முதலாவது திட்டமிடும் குறியீட்டுக்கு ஏற்ப தண்டனை குறியீட்டின் அடிப்படையில் சட்டம் இதனை சார்ந்த குற்றவாளிகளுக்கு பின்பற்றுவதற்காக சட்டங்களை உருவாக்கியுள்ளது.

| *பகுதி* | *குற்றங்கள்* | *பிடி விறாந்து இல்லாமல் சமாதான அதிகாரி கைது செய்ய முடியுமா* | *முதலாவது முறையிலேயே பிடி விறாந்து அல்லது அழைப்பா னையை வழங்க முடியுமா* | *பிணையில் விடக் கூடிய / விட முடியாத* | *கலக்க கூடிய / முடியாத* | *குற்றக் குறியீட்டின் கீழ் தண்டனை வழங்கல்* | *நீதிமன்ற அதிகார வரம்பு* |
|---|---|---|---|---|---|---|---|
| *365* | *செயற்கை குற்றம்* | *பிடி விறாந்து இல்லாமல் கைது செய்ய முடியும்* | *பிடி விறாந்து* | *பிணையில் விட முடியாத* | *கலக்க முடியாத* | *10 ஆண்டுக் கால சிறைத்தண்டனை மற்றும் அபராதம் அத்துடன் கசையடி* | *நீதிபதியின் நீதிமன்றம்* |
| *356A* | *மோத்த அநாகரீக நடவடிக்கை* | *பிடி விறாந்து இல்லாமல் கைது செய்ய முடியும்* | *பிடி விறாந்து* | *பிணையில் விட முடியாத* | *கலக்க முடியாத* | *Imprisonment up to 2 years or fine or both, whipping in addition.* | *நீதிபதியின் நீதிமன்றம்* |

காவல்த்துறையின் பலம் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி குற்றங்கள் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.அப்போது காவல்த்துறை குற்றங்களை தடுப்பதற்காக பலப்படுத்தப்பட்டுள்ளது.ஆகவே காவல்த்துறை யாராவது குற்ற நடவடிக்கைகளில்

ஈடுப்படுகிறார்கள் என்று தெரியும் போது அவர்களை கைது செய்யக் கூடியதாக இருக்கும்.365 மற்றும் 365A யின் கீழ் ஒருவருக்கு தண்டனை வழங்க வேண்டுமென்றால் சரீர உடலுறவு அல்லது மொத்த அநாகரீக நடத்தை மிகவும் அவசியம். ஆனால் பல வழக்குகளில் நாம் கைது செய்யப்படும் காரணங்களை பார்க்கும் போது காவல் துறையினர் அநேகமாக பாலியியல் நடத்தையின் அடிப்படையிலேயே கைது செய்கின்றனர்.அவ்வாறு செய்யும் போது குற்ற சட்டமூலம் எதிர்காலத்தில் கொண்டு வரப்படுகின்றது என்றும் கூறிக் கொள்வார்கள்.[24] இருந்தப் போதிலும் ஏற்கனவே குறிப்பிட்டதுப் போல வழக்குகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை அதே போல யாரும் கைது செய்யப்படவும் இல்லை.அநேகமான இந்த கைதுகள் லஞ்சம் பயமுறுத்தல் மிரட்டி பணம் பறித்தல் வன்முறை மற்றும் பாலியியல் உதவுகள் மூலமே முடிவுக்கு வருகின்றன.

நாங்கள் முதலாவது பகதியில் பார்த்தது போல சூத்திரதாரி நீதிமன்றத்தினால் அழைக்கப்படும் முன் பிடி விறாந்து இல்லாமல் கைது செய்யப்படலாம்.ஒருவர் கைது செய்யப்பட்டால் அவருக்கெதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் அவரை ஆஜர்ப்படத்தல் அவசியமானதொன்றாகும்.365 மற்றும் 365A சட்ட மூலத்தின் கீழ் நீதிமன்றத்திற்க்கு வெளியில் எந்த விதமான செயற்பாடுகளுக்கும் வர முடியாது.அவ்வாறு வருவது அரசாங்கத்திற்க்கு எதிரானதென்றே பொருள்படும்.

## *இலங்கையில் காணப்படும் LGBT மக்களை குற்றவாளி என நிறுபிப்பதற்காக வேறு சட்ட விதிகள் என்ன?*

LGBT நபர்களை அச்சுறுத்தவும் தொல்லைப் பண்ணவும் 365 மற்றும் 365A யை தவிர பல சட்டங்கள் காணப்படுகின்றன.

இலங்கை தண்டனை குறியீட்டின் ***பகுதி 352*** தூண்டப்படும் செயற்பாடுகளுக்காகவும் சட்டபூர்வமான பாதுகாப்புகளுக்கு அப்பால் நடந்துக் கொள்பவர்களை தண்டிக்கவும் சட்டங்கள் காணப்படுகின்றன.[25] தங்கள் வீடுகளை விட்டு சென்று ஒரு பாற் புணர்ச்சியில் ஈடுப்படும் பெண்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்க்கு இச் சட்டமூலம் பாவிக்கப்படுகின்றது.காவற்துறையினர் இதனைப் பாவித்து ஜோடியை பிரிப்பதற்க்கு பிரதானமாக இதனை உபயோகிக்கின்றனர் முக்கியமாக ஜோடியில் ஒரு பெண் 16 வயதுக்கு குறைந்து காணப்படும் போது அதிகளவில் இது பாவிக்கப்படுகின்றது.வயது முதிர்ந்த பெண்களாக இருந்தாலும் அவர்களை திரும்பவும் பெற்றோருடனே காவற் துறையினர் தொடர்பு படுத்திய

---

[24] பொது இடங்களில் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட பால்மாற்றம் செய்து கொண்ட நபர்கள் தொடர்பில் இந்த வழக்குகளை நாம் பார்க்கின்றோம். முழுமையான ஒழுங்கீனத்தை தடுத்தல் என்பதன் அடிப்படையில் பொலிஸாரினால் இவர்கள் கைது செய்யப்படுவதனை நேர்காணல்களின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.
[25] பிரிவு 353, குற்றவியல் நடைமுறைச் சட்டம், இலங்கை

சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றனர்.இந்த குறிப்பிட்ட இனத்துக்கான அணுகுமுறைகளால் பெண்களின் வாழ்க்கை சமூக காலாச்சார விழுமியங்களுக்கு ஏற்ப பேணப்பட்டு பெண்களின் வாழ்க்கை சீராக்கப்பட்டு பெண்கள் திருமணத்தின் போதே வீட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்படுகின்றது.

***பகுதி353*** ன் கீழ் கடத்தல் என்பது பின்வருமாறு வரைவிலக்கணம் படுத்தப்படுகின்றது.கடத்தல் என்றால் யாராவது பலம் உபயோகிக்கப்பட்டோ, கட்டயாமாகவோ அல்லது ஏமாற்றுதல் மூலமாகவோ அல்லது அதிகார துஷ்பிரயோகம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்கள் காரணமாகவோ ஒரிடத்தல் இருந்து ஒரு நபரை வெளியேற செய்வதாகவும் அமையும்.இந்த சட்டமூலமும் பெண்கள் வீட்டை விட்டு போகும் நிலைக்கு எதிராக பாவிக்கப்படுகின்றது.[26]

***காலித்தனமாக சுற்றி திரிபவர்களுக்கான சட்டம்***[27] கலவரம் மற்றும் அநாகரீக நடத்தை எதிராக நடந்துக் கொள்ளும் நபர்கள் குற்றவாளிகளாக கருதப்படுவதுடன் அநாகரீகமாக செயற்படும் பொதுவான விலைமாதுகளையும் தண்டிக்கின்றது.[28] LGBT நபர்கள் முக்கியமாக பால்நிலையை மாற்றிய நபர்கள் இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றனர்.துஷ்பிரயோகங்களுக்கு முன்பே அவர்கள் மிகவும் அவதானமாக இருந்து லஞ்சம் வழங்கி அவர்களை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு அவர்களை தயார் செய்துக் கொள்கின்றனர்.[29]

| ***பகுதி*** | ***குற்றங்கள்*** | ***பிடி விறாந்து இல்லாமல் சமாதான அதிகாரி கைது செய்ய முடியுமா*** | ***முதலாவது முறையிலேயே பிடி விறாந்து அல்லது அழைப்பாணையை வழங்க முடியுமா*** | ***பிணையில் விடக் கூடிய / விட முடியாத*** | ***கலக்க கூடிய / முடியாத*** | ***குற்றக் குறியீட்டின் கீழ் தண்டனை வழங்கல்*** | ***நீதிமன்ற அதிகார வரம்பு*** |
|---|---|---|---|---|---|---|---|
| 353/354 | கடத்தல் | பிடி | பிடி விறாந்து | பிணையில் | கலக்க | 7 | உயர் நீதி |

[26] ஆட்கடத்தல் மற்றும் கடத்தல் தொடர்பில் தமது துணைவர் மீது, பிரிவு 353இன் கீழ் தமது குடும்ப உறுப்பினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டதாக நேர்காணப்பட்ட மூன்று பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள் தெரிவித்தனர். இவற்றில் பெரும்பாலான சம்பவங்களில் நீதிமன்றங்களைப் போல் செயற்படும் பொலிஸார், தேவையான நடவடிக்கையை தீர்மானிக்கின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வீட்டுக்கு திரும்பிச் செல்வதற்கு பெண்கள் வற்புறுத்தப்படுகின்றனர்.

[27] காலித்தனமாக சுற்றித் திரிபவர்களுக்கான சட்டம், http://www1.umn.edu/humanrts/research/srilanka/statutes/Vagrants_Ordinance.pdf

[28] காலித்தனமாக சுற்றித் திரிபவர்களுக்கான சட்டம், பிரிவு 2 மற்றும் 3

[29] பால் மாற்றம் செய்து கொண்டவர்களுடனான நேர்காணல் .

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | / ஆட் கடத்தல் | விறாந்து இல்லாமல் அல்லது உடன் கைது செய்தல் | | விட முடியாத | முடியாத | ஆண்டுகளுக்கான கைது மற்றும் அபராதம் | மன்ற ஆணை |

## *1886 முதல் இந்த இரு பகுதிகளிலும் காணப்படும் சம்பந்தம்*

365 மற்றும் 365A யில் காணப்படும் சம்பந்தங்கள் பல. LGBT நபர்களை குற்றசாட்டுவதற்காக இந்த சட்ட மூலங்கள் பயன்படுத்தப்படாவிட்டாலும் அது LGBT சமூகத்தை துன்புறுத்துவதற்க்கு ஒரு கருவியாகவும் பல சட்டங்கள் மற்றும் அடிப்படை உரிமைகளை மீறுவதற்க்கும் அதன் மூலம் பல வன்முறைகளை ஏற்படுத்தி இலங்கை பிரஜைகள் சந்தோசமாக வாழ்கின்றனர். LGBT சமூகம் எப்போதும் இரண்டாம் தர பிரஜையாக கருதப்படுவதுடன் தனது சுக வாழ்வுக்கான அரசினால் வழங்கப்படும் சலுகைகளை கூட பெற முடியாமல் உள்ளனர்.கீழ் காணப்படும் பகுதியில் இவ்வறிக்கை மூலம் LGBT சமூகத்தின் வாழ்வில் மேற் குறிப்பிடப்ட்ட இரு கூறுகள் மூலமாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

***சட்டம் மூலம் ஏற்பட்ட துன்புறுத்தல்கள்*** -இலங்கையில் நொவம்பர் 2012 வரை, இரு வயது வந்த நபர்கள் கோட்டை புகையிரத நிலையத்தில் பகுதி 365A யின் கீழ் கைது செய்யப்பட்ட போது,வயது வந்தோர் சார்பாக எந்த வித வழக்குகளும் இந்த பகுதியின் கீழ் காணப்படவில்லை.இந்தியாவில் காணப்படும் குப்தாவின் ஆய்வின் படி பார்த்தால் இப்பகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட அநேக வழக்குகள் சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது இரு வயது வந்தவர்களிடையே உள்ள ஒப்புதல் அற்ற பாலியியல் தொடர்பு சம்பந்தமானவையே ஆகும்.[30] இயற்க்கைக்கு எதழராக உள்ள சரீர உடலுறவு சம்பந்தமாக தனிப்பட்ட ரீதியில் நிரூபிக்க முடியாமையும் இதற்க்கு பிரதான காரணமாகும்.இருந்தப் போதிலும் இது சம்பந்தமாக செயற்படும் போது முக்கியமாக காவற்துறையினா் மற்றும் அரசு சார்ந்த சாராத நபர்களால் ஆட்சி எல்லைக்குள் பாலுறவு பற்றிய விருப்பத்தை தெரிவிக்கும் போது LGBT சமூகத்தினை துன்புறுத்தலே அதிகமாக காணப்படுகின்றது. LGBT சமூகத்தின் முழுமையான பாதுகாப்பு

[30] குப்தா. ஏ. பிரிவு 377 மற்றும் இந்திய ஓரினச் சேர்க்கையாளர்களின் கண்ணியம். பொருளாதார மற்றும் அரசியல் நாளேடு. 18 நவம்பர் 2006. இந்திய நீதிமன்றங்களில் முன்வைக்கப்படும் 50 வழக்குகளில் 30 வீதமானவை பாலியல் பலாத்காரம், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் வயது வந்தவர்களுக்கு இடையிலான இணக்கத்திற்கு மாறான உடலுறவு என்பன சார்ந்தது என குப்தா குறிப்பிடுகின்றார். இலங்கை எடுத்துக் கொண்டால், ஒரே பாலினைச் சேர்ந்த வயது வந்தவர்களுக்கு இடையில் இணக்கத்துடனான உடலுறவு குறித்து எந்தவொரு வழக்கும் இல்லை.

துன்புறுத்தல்கள் மூலம் ஏற்படும் சிக்கல்த்தன்மையை அறிந்துக் கொள்வதன் மூலமே உறுதிப்படுகின்றது. LBT பெண்ணுக்கு காணப்படும் சட்டமும் GBT ஆணுக்கு உள்ள சட்டமும் வேறு வேறாகும். ஆண் இந்த சட்டத்துடன் அதிகமாக முரண்படுவது பொது ஆட்சி எல்லைனாலேயே ஆகும். LBT பெண்ணுக்கு துன்புறுத்தல்கள் தனிப்பட்ட மற்றும் சமூகம் சார்ந்ததாக காணப்படுகின்றன.மாற்று பால்நிலை நபர்கள் மற்றும் ஒரின செயற்க்கைளாளர்கள் தங்கள் குடும்பங்களினால் துன்புறுத்தல்களுக்கு ஆளாகுகிறார்கள் இல்லை என பொருட்படாது. LGBT சமூகம் அனைத்து பகுதிகளிலிருந்து துன்பறுத்தல்களுக்கு ஆயாக்கப்படுகிறார்கள் என கூறினால் மிகையாகாது.

LGBT சமூகத்தோடு நேர்காணலில் ஈடுப்படும் போது தெரிய வருவது என்னவென்றால் மாற்று பாலியியலாளர்கள் மற்றும் இனக்கலத்தலில் ஈடுப்படுவோர் அதிகமாக பொலிஸாரினால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பது தெரிய வருகின்றது.[31] கைதுகளை தடுப்பதற்க்கு லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது அல்லது அதற்க்கு பதிலாக பாலியியல் நடவடிக்கையில் ஈடுப்பட நேருகிறது.365 மற்றும் 365Aயின் கீழ் சரீர சம்பந்தமான உடலுறவு சம்பந்தமாக நிரூபிக்க முடியாததன் காரணமாக பொதுப்படையாக பாலியியல் சட்டம் பற்றிய ஒரு கலந்துரையாடலை கொண்டு செல்ல முடியாமல் உள்ளது.விந்தை தோற்றம் காரணமாகவும் சரீர உடலுறவில் ஈடுப்படுவது எப்போதும் நடைப் பெறும் போதும் பாவற்த்துறையினருக்கு மாற்று பால்நிலை தொழிலாளர்களை கைது செய்வதற்கான அதிகாரத்தை வழங்கல்.சாதாரண பாலியியல் வகி பங்கு இல்லாதவர்கள் உடலில் சட்டமற்ற குற்றம் பதியப்பட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

LBT பெண்கள் சம்பந்தமாக பார்க்கும் போது பல தருணங்களில் குடும்பங்கள் கடத்தல் வழக்குகளை பெண்ணின் மீது சுமத்தல் ஏற்படுகின்றது.இருவருமே வயது முதிர்தோராக இருந்தால் இக்குற்றம் சுமத்தப்படுகின்றது.[32] இவை தொடர்ந்து தொடர் நடவடிக்கைகளை மேற்க் கொள்ளாததன் காரணமாக இடையில் விடுபடும் சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது. கடத்தல் வழக்குகள் அநேகமாக கட்டாயப்படுத்தல்[33] என்றே நேற்றுக்

---


[31] நேர்காணப்பட்ட 100% பால் மாற்றம் செய்து கொண்ட நபர்கள் தாம் பலாத்காரம் மற்றும் வன்முறைக்கு இலக்கானதாக தெரிவித்தனர்.

[32] கொழும்பில் பெண் ஓரினச் சேர்க்கையாளருடனான நேர்காணல்

[33] இலங்கையில் பெண் ஓரினச் சேர்க்கையாளர்களின், இரட்டைப் பாலுறவு பெண்களின், பால் மாற்றம் செய்து கொண்ட நபர்களின் நிலைமை, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் ஒழிப்பது தொடர்பான குழுவிற்கான அ.சா.நி நிழல் அறிக்கை http://www2.ohchr.org/english/bodies/cedaw/docs/ngos/WSG_SriLanka48.pdf


கொள்ளப்படுகின்றது.எவ்வாறாக இருந்தாலும் இந்தியாவை போலில்லாமல் LBT பெண்களுக்கு[34] எதிராக ஹாபியஸ் கொப்ஸ் என்ற கொள்கை செயற்படாமலேயே காணப்படுகின்றது.தம்பய்யா பெற்றோர், வகுப்புவாதம் மற்றும் காலாச்சார கண்கானிப்பு சட்டத்துடன் தொடர்புபட்டு பாலியியல் ஒர் சிந்தனை மூலம் தனது வெளிப்பாட்டை கட்டுபடுத்தி மாற்று பாலியியல் விருப்பங்களில் அக்கறை தெரிவித்தல்.[35]


***LGBT நபர்களால் முகம் கொடுக்கப்படும் பொலிஸ் வன்முறை***




[34] அரசு. பி, தங்கராஜா. பி. விந்தையான பெண்கள் மற்றும் ஆட்கொணர்வு நடுவர் பேராணை இந்தியா: சட்டத்தை குருடாக்கும் காதல். *பால்நிலை கற்கைகளின் இந்திய சஞ்சிகை.*, 19, 3 (2012) 413-435

[35] தம்பையா, ஆண்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களும், பெண்களின் உணர்வுகளும்: இலங்கையில் பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள் சட்டத்தினால் எதிர்கொள்ளும் போராட்டம். *லைன்ஸ் சஞ்சிகை,* மே 2003, 13-01-2013 அன்று பார்க்கப்பட்டது. http://issues.lines-magazine.org/Art_May03/yasmin.htm




- ***பாராபட்ச பிரஜைகள்*** – சட்ட மற்றும் பாகுபாடு காரணமாக LGBT மக்கள் இலங்கை சட்டமூலத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதில் கஷ்டப்படுகின்றனர். வெளிப்படையாக ஒரின சேர்க்கை பற்றி எந்தவொரு வழக்கம் பதிவு செய்யதாதன் காரணமாக அடிப்படை உரிமைகள் பற்றி சுதந்திரமாக செயற்பட முடியாமல் மற்றும் பாதுகாக்க முடியாமலும் போகின்றது.[36] LGBT மக்கள் சட்ட மூலம் விளிம்பில் இருந்து வெளியேற வேண்டிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.சட்ட மூலத்தில் பால்நிலை,சமயம்,இனம் மற்றும் சாதி சம்பந்தமாக எந்தவித பாகுபாடும் இருக்க கூடாது

[36] மனித உரிமைகள் நிறுவனமாகவும், பால்நிலை குறித்த விடயங்களை பிரதான செயற்பாட்டு பகுதியாக கொண்டிருந்த போதிலும், நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட 13 அரச சார்பற்ற நிறுவனங்களில் 78 வீதமானவை LGBT நபர்களின் உரிமைகள் தொடர்பில் செயற்படவில்லை எனத் தெரிவித்தனர். LGBT நபர்கள் எதிர்கொண்ட வன்முறைகளை உரிமைகள் மீறலாகவே பெரும்பாலான நிறுவனங்கள் பார்க்கவில்லை. பகிரங்கமாக தம்மை விந்தையான பெண் என கூறிக் கொள்ளாத விந்தையான நபர்களினால் முன்வைக்கப்பட்ட மனித உரிமை மீறுல்கள் முறைப்பாடுகள் என்ற உண்மையை இவை மறுப்பதாக இல்லை. எவ்வாறாயினும், விந்தையான நபர்கள் எதிர்கொள்ளும் அச்சம் மற்றும் களங்கத்தின் காரணமாகவே, அவர்கள் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதில்லை.

என்று கூறப்பட்ட போதிலும் பாலியியல் தொடர்பு சம்பந்தமான பாகுபாடு இருக்க கூடாது என்று கூறிப்பிடப்படவில்லை.மாறுப்பட்ட ஒழுங்குமுறை செயற்திறன் காணப்பட்டாலே LGBT பிரஜை பாதுகாக்கப்படுகிறார். LGBT பிரஜைகள் தொழில் சார் வழக்குகளுக்கு பல தடைவ முகம் கொடுத்து தொழில் சார் பிணக்குகளை தீர்ப்பதற்க்கு பாடுப்பட்டனர்.ஆனால் பாலியியல் தொடர்பு சம்பந்தமான எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை அத்துடன் பாகுபாடு சம்பந்தமான எந்த சந்தர்ப்பமும் அடையாளமும் காணப்படவில்லை.

சட்ட மூலங்கள் மூலம் வெளிப்படுத்தலுக்கான சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தாலும் மாற்று பால் மக்கள் அவர்கள் தேர்ந்தெடுத்த பால் காரணமாக பல்வேறுப்பட்ட இன்னல்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். கடந்த காலங்களில் அநேகமான வழக்குகள் ஆள்மாறாட்டம் மற்றும் தவறான பிரதிபலிப்பு என்றதன் கீழ் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்க்கு கொண்டு வரப்பட்டது.அதன் போது பெண்கள் ஆண்கள் போல மாறுவேடமிட்டு வந்தது கண்டுப்பிடிக்கப்பட்டு உண்மையான பாலியியல் தோற்றம் பொதுமக்களிடையே காண்பிக்கப்பட்டது.அதே போல மாற்று பெண்களும் பொது மக்களை தவறாக வழி நடத்தியதற்காக கைது செய்யப்பட்டனர்.[37]

ஆகவே LGBT பிரஜைகள் பற்றிய தவறான கருத்துக்களை உண்மையாக்கியும் ஆதரிப்பதிலும் ஊடகங்கள் பெரும் பங்காற்றுகின்றன.2000 ஆண்டு ஜூன் மாதம் அச்சக சங்கம் ஐலண்ட் பத்திரிக்கையில் வெளியாகிய கடிதத்திற்க்கு ஆதரவு தெரிவித்தது.அதாவது ஓரின சேர்க்கை கூட்டத்தில் பாலியியல் பலாத்காரத்தை மேற்க் கொண்டவரை வெளிக் கொணர வேண்டும் என்ற அறிவித்தலை விடுத்தது.[38] ஏடுக்கப்பட்ட தீர்மானம் பின்வருமாறு அதனை கூற முற்பட்டது. “ ஓரினச் சேர்க்கையே மிகவும் சோகம் நிறைந்தது.அவ்வாறான நடவடிக்கைகள் எதிராக வரும் எந்த இச்சை நிறைந்த வெளியீடும் அதனை சார்ந்ததாக அமையாது ஆனால் அதற்க்கு உதவும் எந்த வெளியீடும் வன்முறை, காமவெறியுடன் செயற்படுதல் என்பவற்றை முன்னோக்கி கொண்டு செல்லுதலுக்கு உதவுவதாக அமையும்.வழக்கு தொடர்ந்த நபருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.[39]
ஓரின சேர்க்கையை சேர்ந்த பல ஆண்கள் இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் உதாரணமாக அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.அதற்க்கு காரணமாக அவர்கள் கூறுவது இலங்கையில் தங்களுக்கு

[37] பெண்கள் ஆதரவு குழு, நிழல் அறிக்கை, பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான குழுவிற்கான அ.சா. நி நிழல் அறிக்கை, ஜனவரி 2011. 16-01-2013அன்று பார்க்கப்பட்டது. http://www2.ohchr.org/english/bodies/cedaw/docs/ngos/WSG_SriLanka48.pdf

[38] பி. அளஸ். ‘கொழும்பில் பெண் ஓரினச் சேர்க்கையாளர்களின் மாநாடு?” த ஐலன்ட், ஆகஸ்ட் 20, 1999.

[39] இலங்கை பத்திரிகையாளர் சங்கம், S2/99/2096, 2000 முறைப்பாடு தொடர்பான தீர்ப்பு

தொந்தரவு ஏற்படுவதாயும் தெரிவித்துள்ளனர்.அதில் இருவர் கிழக்கிலங்கைளை சேர்ந்தவர்கள்.அவர்கள் தாங்கள் பாலியியல் தொடர்பு காரணமாக கடத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, அவர்களுடைய வாழ்வுக்கு ஒரு கேடு வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். EQUAL GROUND ம் தன்னுடைய அறிக்கையில் ஒரு முஸ்லிம் ஆண் பேருவலையில் வசிப்பவர் தன்னுடைய பாலியியல் தொடர்பு காரணமாக தாக்கப்பட்டதன் காரணமாக இலங்கையை விட்டு வெயியேறினார்.

***சுகாதார வசதிகளுக்கான வாய்ப்பு*** – ஒரினச் சேர்க்கை என்பது இலங்கையில் இன்னும் மனநோய் ஆகவே காணப்படுகின்றது.ஆனால் அநேக நாடுகளில் இது மன நோய் பட்டியியலில் இருந்து நீக்கப்பட்டன. LGBT மக்கள் இன்னுமும் மனநல வைத்தியரிடமட கொண்டு செல்லப்பட்ட ஒரினச் சேர்க்கைக்கு வைத்தியம் தேடுகின்றனர்.[40] இதன் காரணமாக இவர்கள் அதிகமான மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் பெரிய மனம் சார்ந்த தாக்கத்தையும் இவர்களுக்கு ஏற்படுத்துவதால் இவர்கள் மன அழுத்தம் மற்றும் தற்கொலை முயற்சியை நோக்கி செல்லுகின்றனர். LGBT மக்கள் உள வள ஆலோசனைக்கோ மன அழுத்ததிற்கான சிகிட்சைக்கோ செல்ல முடியாததற்கான காரணம் இம்மக்களுடன் நட்புறவுடன் ஒன்று சேர்ந்து வேலை செய்யக் கூடிய மனநல வைத்தியர்கள் இல்லாததே ஆகும்.[41]

பேரியளவில் LGBT மக்களுக்கு மருத்துவ வசதியை பெற்றுக் கொள்வதில் தடை ஏற்படுத்தாத போதிலும்[42] பாகுபாடு காரணமாக பூரணமான விபரங்கள் வைத்தியரிடம்


---

[40] ஓரினச் சேர்க்கை குறித்த சம்பவங்கள் நடத்தை சார் குறைபாடாக கருதப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதுடன், சில சந்தர்ப்பங்களில் அதிர்ச்சி வைத்தியம் அளிக்கப்படுவதாகவும் 83 வீதமான மனநல வைத்தியர்கள் ஒத்துக் கொண்டனர்.

[41] வெளியில் வருதல், குடும்பத்திற்குள், சமுதாயத்திற்குள் எதிர்கொள்ளப்படும் வன்முறையை எதிர்கொள்வதற்கு உளவியலாளர்களின், உளவியல் வைத்தியர்களின் உதவியை பெறுவதற்கு 97% LGBT நபர்கள் விருப்பம் கொண்டவர்களாக இல்லை. வைத்தியர்களின் எதிர்மறையான பிரதிபலிப்புக்கள் குறித்து 80 வீதமானவர்கள் அச்சம் கொண்டிருந்தனர். அத்துடன், தாம் சந்தித்த வைத்தியர்களிடம் போதிய அறிவு இன்மையால் எதிர்மறையான நடத்தையை எதிர்கொண்டதாக 12 வீதமானோர் தெரிவித்தனர்.

[42] EQUAL GROUND களங்கச் சுட்டெண்.

கொடுக்கப்படுவது தடுக்கப்படுகின்றது என்பதனை புரிந்துக் கொள்ளல் அவசியம்.




- ***சிறுவர் துஷ்பிரயோகத்திற்க்கு எதிராக பாதுகாப்பு தோல்வி*** – தற்போதைய சூழ்நிலையில் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதில் அதிக அக்கறை வேகம் முதலில் காணப்பட்டாலும் தற் பாது அது மிகவும் பின்னடைந்து காணப்படுகின்றது. காவற்துறையினரிடம் நேர்காணல் செய்த போது பகுதி 365 மற்றும் 365A என்பன சிறுவர் துஷ்பிரயோகத்திற்க்காக பாவிக்கப்படும் ஒன்று என கூறினர்.[43] ஆனால் இவ்வழக்ககள் பல ஆண்டுக் காலம் நடைப் பெறுவதால் நிதிமன்றம் சிறுவர் சார் அணுகுமுறையை பயன்படுத்த முடியாமல் போகின்றது.இச்சட்டங்களின் கீழ் தண்டனை மிகவும் கடினமாக அருந்தக் போதிலும் நீதிமன்றம் முறையாக இந்த தண்டனைகளை நடைமுறைப்படுத்த தவறியுள்ளது,மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் விவாதம் செய்ததுப் போல இது மிகவும் தீவிரமானதொன்றல்ல ஆனால் அநேக குற்றங்களை தடுப்பதற்க்கு இச்சட்டம் பயன்படுத்தலாம்.நீதிமன்றம் இரு சேறு சந்தர்ப்பங்கள் பற்றி அடையாளங் காண தவறி விட்டது.ஒப்புதலுள்ள மற்றும் ஒப்புதலற்ற பாலியியல் தொடர்புகள் அதாவது ஆண் வயது வந்த கவர்ச்சியாளர்கள் அல்லது இளைஞர்களை துன்புறுத்துபவர்கள்,மற்ற ஆணை பலத்காரமாக கற்பழிக்கும் ஆண் மற்றும் ஆண் ஒரின புணர்ச்சியாளர்கள் (ஒப்புதல் உள்ள பாலியியல் நடவடிக்கையில் ஈடுப்படல்)அனைவரும் ஒன்று ஒரே நடவடிக்கை

[43] பிரிவு 365, 365அ என்பன சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் பயன்படுத்தப்படுவதாக நேர்காணப்பட்டவர்களில் 80 வீதமான பொலிஸார் தெரிவித்தனர். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தை எதிர்கொள்வதில் இவை போதுமானவை என 50 வீதமான பொலிஸார் கருதினர். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் இவை பயன்படுத்தப்படக் கூடாது என மேலும் 50 வீதமான பொலிஸார் கருதினர்.

என்பதாகும்.ஓரினச் சேர்க்கை நடவடிக்கைகள் வித்தியாசமான நடவடிக்கைகளாக கருதப்படுவதால் அவை ஒப்புதலுள்ள பாலியியலின் கீழ் வராது அதன் காரணமாக இவை ஒப்பிடக் கூடியவையாக இல்லை.[44]

சிறுவர் உரிமை சம்பந்தமாக இலங்கை பல சட்டங்களை நிறைவேற்றி உள்ளது. மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் மைக்கப்பட்டு அதன் மூலும் அரசுக்கு சிறுவர் துஷ்பிரயோகம்[45] சம்பந்தமாக கருத்துக்களை முன் வைக்குமாறு பணிக்கப்பட்டது.[46] பகுதி 360E யின் படி யாரோருவர் பாலியியல் துஷ்பிரயோகத்திற்காக சிறுவர்களை பாவிக்கிறார்களோ அவர்களுக்கு பத்தாண்டு காலம் சிறைத்தண்டனை வழங்கப்படும்.[47] பகுதி 365 மற்றும் 365A க்கு பதிலாக இந்த சட்டம் சிறுவர் துஷ்பிரயோக தடைக்கு பாவிக்கலாம் என விவாதிக்கலாம்.இந்த பகுதி சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்பு பட்டு வேலை செய்படுவதற்காகவே உருவாக்கப்பட்டது.

பாரிய கலாச்சார மற்றும் சமூக சூழமைவுக்குள் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி பேசுவதற்கான தெவை அதிகமாகவே காணப்படுகின்றது. பாலியியல் என்பது மிகவும் மட்டமான கற்கை என நாம் கருதினால் பாலியியல் மிகவும் மோசமானது என்ற படத்தை கொண்டு வந்தால் நாங்கள் சிறுவர்கள் தங்களை துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள நாம் உதவில்லை என்றே ஆகி விடும். அரசாங்கம் பல வழிகளிலும் புதிய சட்டங்களை கொண்டு வருகின்றது,மனபாங்குடன் கூடிய பாலியியலை தடுக்க நடவடிக்கைகளை மேற்க் கொள்கின்றது,இவைகளைரனத்தும் மிகவும் உள்வாங்கப்பட்டவையாகவும் நியாயம் சாந்ததாகவுமே காணப்படுகின்றது.

---

[44] குப்தா. ஏ. பிரிவு 377 மற்றும் இந்திய ஓரினச் சேர்க்கையாளர்களின் கண்ணியம். பொருளாதார மற்றும் அரசியல் நாளேடு. 18 நவம்பர் 2006.

[45] குடும்ப வன்முறையை ஒழிப்பதற்கான சட்டம் இல. 34, 2005. பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்கலாக குடும்ப வன்முறையினால் பாதிக்கப்படும், ஆபத்துக் கொண்டுள்ளவர்களின் பாதுகாப்பு கட்டளைகளை வழங்குகின்றது. குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) இல 16, 2006, பிரிவு 360 இ,ஆனது, சிறுவர் ஆட்கடத்தலுக்கு எதிரான சட்டத்தை வலுப்படுத்தியது. சிறுவர்களின் நல்லார்வங்களே மிகவும் முக்கியமானது என சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் (ICCPR), 2007ஆம் ஆண்டு 56ஆம் இலக்க சட்டம் குறிப்பிடுகின்றது.

[46] தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சட்ட இல. 50, 1998

http://www.ilo.org/dyn/natlex/docs/WEBTEXT/52618/65161/E98LKA01.htm

[47] பிரிவு 360உ, (1) எந்தவொரு நபரும், இலங்கையராக அல்லது வெளிநாட்டவராக இருப்பினும், (அ) பதினெட்டு வயதுக்கு குறைந்த நபர் அல்லது (ஆ) பதினெட்டு வயதுக்கு குறைந்தவர் என கருதப்படும் நபர், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் போது, பத்து வருடங்கள் வரை நீடிக்கக் கூடிய சிறைத்தண்டனை அல்லது அபராதம், அல்லது இரண்டினையும் அனுபவிக்க நேரிடும். பிரிவு 360 உ என்பது, குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) சட்ட இல 16, 2006இல் உள்வாங்கப்பட்டது.

## *365 மற்றும் 365A மூலம் LGBT நபர்கள் குற்றம் சாட்டப்பட்டாள்கள் என்றால் அவர்களால் நல்ல முறையில் பாவிக்க கூடிய சட்ட உதவிகள் எவை?*

இந்தப் பகுதியில் அறிக்கை அடிப்படை உரிமைகள் பற்றியும் இவற்றின் உத்தரவாதம் பற்றியும் ஆராய்கின்றது.

தற்போது இந்த அடிப்படை உரிமை சட்டம் மட்டுமே சட்டங்களை சவால் விடுவதற்காக உள்ள ஒரே உள்ளூர் சட்டமாக இருக்கின்றது.இருந்தப் பொழுதிலும் இலங்கை அரசாங்கம் பல சர்வதேச சட்ட மரபுகளை சில கடப்பாடுகளின் கீழ் கொண்டுள்ளன.

இலங்கை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளில் சர்வதேச ஒப்புதல்களை உட்புகுத்தியுள்ளது. சர்வதேச ஒப்புதல்களை பொருளாதாரம், சமூக கலாச்சார உரிமைகள்,பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் அகற்றல்,அனைத்து சாதி சம்பந்தமான பாகுபாடுகளையும் அகற்றல்,மற்றும் சிறுவர் உரிமை என்பவற்றிற்க்கு வழங்கியுள்ளது. அது மட்டுமில்லாமல ICCPR மற்றும் CEDAW இரண்டாவது விருப்ப நெறிமுறையை பின்பற்றுவதுடன் தனிப்பட்ட முறையீடுகளை வழங்குவதற்க்கும் உதவி புரிகின்றது. இருந்தப் போதிலும் 2006ம் ஆண்டு ICCPR க்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட முதலாவது விருப்ப நெறிமுறை சட்டம் சார்ந்தது அல்லது என்று மேன் நீதிமன்றம் முறையிட்டு மீண்டும் அதனை மறு பரிசீலனை செய்யுமாறு அழைத்தது. இவ்வாறான சட்டங்களை நிறைவேற்றும் போது அது இலங்கை அரசாங்கத்தின் இயலுமையை பாதிப்பதன் காரணமாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால் பாராளுமன்றத்தின் வாக்கெடுப்புக்க விட்ட பின்னரே இவ்வாறான சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது.

யோக் யாக்கார்த்த கொள்கைகள் இலங்கையில் நடைமுறைப்படுத்த முடியாததன் காரணமாக ஏனைய சர்வதேச சட்டங்களுக்க முகம் கொடுக்க முடியாமல் போய் விடலாம் என்ற விவாதத்தை மேற்க் கொண்டாலும் அவற்றின் மூலம் LGBT சமூகத்தை பாதுகாக்கலாம் என உறுதியாக கூற முடியும்.

இந்த சர்வதேச மரபுகள் அனைத்து மக்களையும் சரி சமமாக பார்க்க வேண்டும், அவர்களின் கருத்துக்களை செவிமடுத்தல் வேண்டும்,வேலைகளை செய்வதுடன் அரசு வழங்கும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ள வழிவகைகள் செய்ய வேண்டும் என உறுதியாக கூறுகின்றது. இந்த மரபுகளில் பாலியியல் தொடர்பு பற்றி கூறாவிட்டாலும் சர்வதேச மட்டத்தில் பாலியில் தொடர்பு ஒரு குற்றமற்ற செயல் என்றே கூறப்படுகின்றது.

LGBT நபர்களுக்கு[48] மனித உரிமை ஆணைக்குழுவினால் அவர்களுடைய உரிமை பற்றி பேசிய தருணங்களும் உண்டு.சர்வதேச நீதிமன்றமும் சர்வதேச பாகுபாடற்ற சட்டத்தின் கீழ் LGBT மக்களின் உரிமைகள் பாதுகாகப்படலாம் எனக் கூறுகின்றது.[49]

இலங்கை அரசியல் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமை அத்தியாயம் இலங்கை பிரஜைகளின் உரிமைகள் பற்றி விளக்கம் தருகின்றது.

***கட்டுரை 12*** கூறுவது என்னவென்றால் அனைத்து பிரஜைகளும் சட்டத்தின் முன் சமன் என்பதாகும்.[50] அத்துடன் சட்டத்தின் மூலம் அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.இது ஒரு LGBT நபர் கைது செய்யப்படும் போது சவால் விட உபயோகப்படுத்தக் கூடிய ஒரு சட்டமாகும். முக்கியமாக LGBT நபர் எந்தவித ஆதாரமும் இல்லாமல் கைது செய்யப்படும் போதும் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படும் போது இதனை பாவிக்கலாம்.

***கட்டுரை 13*** கூறுவது என்னவென்றால் ஒருவர் கைது செய்யப்படும் போது அல்லது தடுத்து வைக்கப்படும் போதும் சட்ட நடைமுறைகள் பாவிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.[51] LGBT நபர் கைது செய்யப்படும் பல வழக்குகளில் சட்ட நடைமுறைகள் பாவிக்கப்படுவதில்லை அத்துடன் நீதிமன்றத்துக்கும் பல வழக்குகள் கொண்டு செல்லப்படுவதில்லை. கட்டுரை 13ன் மூலம் காவற்துறையினரால் கைது செய்யப்படுபவர்கள் தக்க தகவல்களை வழங்குவதற்க்கும் சட்ட நடைமுறைகளை சட்டப்படி நடைமுறைப்படுத்துவதற்க்கும் வழி சமைக்கும்.

***கட்டுரை 14*** கூறுவது என்னவென்றால் ஒவ்வொரு பிரஜையின் கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பதேயாகும்.[52] இதன் கீழ் கூறப்படுவது என்னவென்றால் ஒவ்வொரு பிரஜைக்கும் பேசுவதற்கான சுதந்திரம் உண்டு. ஆனால் நாங்கள் LGBT நபர்களின் பேச்சு சுதந்திரத்தை பார்த்தால் அது மிகவும் கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. பகுதி 365மற்றும் 365A சட்டம் மட்டுமே குற்றமாகிவிட்டது ஆனால் பாலியியல் தொடர்பு பற்றி விழிப்புணர்வு மற்றும் பரவாலாக்கத்தை தடை செய்ய முடியாது.கருத்து சுதந்திரத்தின் கீழ் ஒருவரின் பாலியியல் நடைமுறைகள் பாதுகாக்கப்படுவதுடன் மாற்று பாலியியல் நபர்களை துன்புறுத்துவதோ பால் என்ற சொல்லின் மூலம் ஆண் பெண் என்று வேறுப்படுத்தி பேசுதலும் கட்டுரை 14ன் கீழ் ஒரு வன்முறை செயலாகவே காணப்படும்.மேலே கூறப்பட்ட அனைத்து விருப்புகளும் பாலியியல்

---

48 டூனென் எதிர் அவுஸ்திரேலியா

49 http://www.unhcr.org/refworld/docid/4a783aed2.html

50 (1) சட்டத்தின் முன் அனைவரும் சமன். சட்டத்தின் சமத்துவமான பாதுகாப்பிற்கும் பாத்திரமாவார்கள்.

51 சட்டத்தினால் விளக்கப்படாத நடைமுறைகள் தவிர்த்து எந்தவொரு நபரும் கைது செய்யப்பட முடியாது. கைது செய்யப்படும் எந்தவொரு நபருக்கும், கைது செய்யப்படுவதற்கான காரணம் விளக்கப்படல் வேண்டும்..

52 14. (1) அனைத்து பிரஜைகளுக்கும் பிரசுரித்தல் உள்ளடங்கலாக பேசுவதற்கும், வெளிப்படுத்துவதற்குமான சுதந்திரம் உள்ளது.

தொடர்புடன் நேரடியாக தொடர்புடையவை அல்ல ஆகால் அவை இவற்றை பற்றி பேசுவதற்க்கும் திறந்த நிலையில் காணப்படுவதுடன் பல் நாடுகள் இவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி சட்டங்கயை விரிவுப்படுத்துதுவதற்க்கும் சட்டத்தினுள் காணப்படும் சமூகத்தின் உரிமைகளை பாதுகாக்கவும் வழி வகுக்கின்றது.

இலங்கையில் புத்த தர்மம் மற்றும் இந்து சமயம் போன்ற சமயங்கள் ஓரினச் சேர்க்கை ஒழுக்கமற்றது என் கூற விலையவில்லை மற்றும் பல கட்டிட வடிவங்களில் ஏற்றுக் கொள்ளும் தன்மை காணப்பட்டாலும் பல்வேறுப்பட்ட பாலியியல் விடயங்களை உற்சவமாக கொண்டாடும் நிலை அங்கு காணப்படவில்லை.

## *முடிவுரை*

LGBT நபர்களுக்கு எதிராக வன்முறைகள் மேற்க் கொள்ளப்படுவதற்கான நீண்ட வரலாறு இலங்கைக்கு காணப்படுகின்றது.பல்வேறுப்பட்ட மாவட்டங்களில் நடாத்திய நேர்காணலின் போது அறிய வந்தது என்னவென்றால் ஓரினச் சேர்க்கை செயற் பாடுகளை கண் கூடாக காண்பதாகவும் நாளாந்த முறையில் வேறுப்பட்ட பாலியியல் தொடர்புகள் கொள்வோர் மீது தொடர் வன்முறை காணப்படுவதாகவும் தெரிய வந்தது.

எந்தவொரு சமூகத்தினுள் காணப்படும் சட்டமும் எது சரி எது பிழை என்பதை தீர்மானிப்பதில் பெரும் பங்கை வகிக்கின்றது. இது உண்மையென நாம் பகுதி 365 மற்றும் 365A யை பார்க்கும் போது தெளிவாகின்றது. காலனித்துவ சட்டங்கள் எங்களுடைய கலாச்சாரம் மற்றும் நெறியில் பியைந்திருப்பதை காணக் கூடியதாக உள்ளது. பகுதி 365 மற்றும் 365A வின் வாழ்க்கை சில சட்டங்களின் குற்றத்தன்மையை விட ஆழமாக செல்கின்றது. அது முழு சமூகத்தினயும் பாகுபடுத்துவதுப் போல அமைகின்றது. அத்துடன் அவர்களை முழுமையாக காவற்துறையினரின் துன்புறுத்தல்களுக்கு விட்டுவிடுவதுடன் சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் மற்றும் சுகாதார சலுகைகள் மறுக்கப்படும் ஒரு நிலைமையும் காணப்படுகின்றது. அநேக நாடுகளில் போல சட்டம் துன்பறுத்தலுக்கே பயன்படுத்தப்படுகிறது.ஆகவே துன்புறுத்தல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்க்கு படிமுறைகளை உருவாக்குவதோடு சட்டங்கள் ஒழுங்காக நடைமுறைப்படுத்தலும் அவசியமாகின்றது அத்துடன் LGBT நபர்கள் கைது செய்யப்படுவதோ சந்தேகப்படுவதோ தடுத்து நிறுத்தப்படுதல் வேண்டும். இலங்கையின் பிரஜைகள் என்றப்பபடி LGBT நபர்கள் முழு சுதந்திரத்துடன் வாழ்வதற்க்கும் உரிமைகளுடன் இருப்பதற்க்குமான நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல் அவசியம்

## *சிபாரிசுகள்*

- வயது வந்தோரை ஒப்புதலுள்ள பாலியியல் தொடர்பினால் துன்புறுத்தக் கூடாது அது மிகவும் தனிப்பட்ட விஷயமாகும்.
- சட்டங்களையும் கொள்கைகளையும் உருவாக்கலும் அனைத்து இடங்களிலும் பொது ஆட்சி எல்லை மற்றும் தனிநபர் வாழ்க்கை என்பவற்றில் பாலியியல் தொடர்புகள் காரணமாக துன்புறுத்தலில் தடைகளை ஏற்படுத்துவதும் மிகவும் அவசியமானதொன்றாகிறது.அத்துடன் சமமான பாதுகாப்புஇ சமமான வாய்ப்பு மற்றும் சரியான உரிமைகளை வழங்கல் என்பவை மிகவும் அவசியமாகின்றது
- அரசு காவல்த்துறையினருக்கு பயிற்சிகளை வழங்கும் போது அவர்களுக்கு LGBT சமூகம் பற்றிய கூருணர்வையும் புகுத்துதல் அவசியமாகும்.காவற் துறையினரே சட்ட கட்டமைப்பின் முகம் என்பதன் காரணமாக இது மிகவும் அவசியமாகிறது.

  வவுழக்கறிஞர்களுக்கும் கூருணர்வு ஏற்படுத்துதல் மிகவும் அவசியமாகின்றது. அதற்க்கு முக்கிய காரணம் காவற்துறையினரின் துன்புறுத்தல் மற்றும் வன்முறை காரணமாக உருவாகும் வழக்குகள் சம்பந்தமாக நபர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்தல் மிகவும் அவசியமானதொன்றாகின்றது.அத்துடன் ஒழுங்கான கூருணர்வுள்ள சட்ட ஆலோசனைகளையும் வழங்கலாம்.
- LGBT சமூகத்திற்க்கு சட்டங்கள், உரிமைகள் மற்றும் சட்டபூர்வமான பாதுகாப்பு நுட்பங்கள் என்பவைப் பற்றி புரிந்துணர்வை ஏற்படுத்தல் மிகவும் அவசியமாகின்றது.